பொருளடக்கம்

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 9

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 18

இமாம் திர்மிதீ ﵀ வாழ்க்கைக் குறிப்பு / 23

ஆய்வறிஞர் முன்னுரை / 29

பாடம் 1: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் உடலமைப்பும் தோற்றமும் / 43

பாடம் 2: நபித்துவ முத்திரை / 60

பாடம் 3: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் சிகை அலங்காரம் / 65

பாடம் 4: அல்லாஹ்வின் தூதர் ﷺ தலைமுடி வாருகின்ற முறை / 67

பாடம் 5: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் நரை முடிகள் / 69

பாடம் 6: அல்லாஹ்வின் தூதர் ﷺ தலைமுடிக்குச் சாயமிடுதல் / 72

பாடம் 7: அல்லாஹ்வின் தூதர் ﷺ கண்ணுக்கு ஸுர்மா இடுதல் / 74

பாடம் 8: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் ஆடைகள் / 76

பாடம் 9: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் காலுறை / 80

பாடம் 10: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் காலணி / 82

பாடம் 11: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் மோதிரம் / 86

பாடம் 12: அல்லாஹ்வின் தூதர் ﷺ வலது கையில் மோதிரம் அணிதல் / 89

பாடம் 13: அல்லாஹ்வின் தூதர் ﷺ பயன்படுத்திய போர்வாள் / 92

பாடம் 14: அல்லாஹ்வின் தூதர் ﷺ போரில் பயன்படுத்திய உடல்கவசம் / 94

பாடம் 15: அல்லாஹ்வின் தூதர் ﷺ போரில்
பயன்படுத்திய தலைக்கவசம் / 95
பாடம் 16: அல்லாஹ்வின் தூதர் ﷺ அணிந்த தலைப்பாகை / 96
பாடம் 17: அல்லாஹ்வின் தூதர் ﷺ அணிந்த கீழாடை / 98
பாடம் 18: அல்லாஹ்வின் தூதர் ﷺ நடந்து செல்லும் முறை / 100
பாடம் 19: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் முக்காடு / 101
பாடம் 20: அல்லாஹ்வின் தூதர் ﷺ அமரும் விதம் / 102
பாடம் 21: அல்லாஹ்வின் தூதர் ﷺ சாய்ந்திருக்கும் விதம் / 104
பாடம் 22: அல்லாஹ்வின் தூதர் ﷺ பிறர்மீது சாய்ந்து
நடந்த விதம் / 106
பாடம் 23: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின்
வாழ்க்கை நிலை / 107
பாடம் 24: அல்லாஹ்வின் தூதர் ﷺ உண்ணும் முறை / 116
பாடம் 25: அல்லாஹ்வின் தூதர் ﷺ உண்ட
ரொட்டியின் தன்மை / 118
பாடம் 26: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின்
ஆணம், குழம்பு / 121
பாடம் 27: அல்லாஹ்வின் தூதர் ﷺ உண்ணும் முன்
வுளூ செய்வது / 132
பாடம் 28: அல்லாஹ்வின் தூதர் ﷺ உண்பதற்கு முன்பும்
பின்பும் கூறியவை / 134
பாடம் 29: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் குடிக்கப்
பயன்படுத்திய குவளை / 137
பாடம் 30: அல்லாஹ்வின் தூதர் ﷺ சுவைத்த பழ வகைகள் / 138
பாடம் 31: அல்லாஹ்வின் தூதர் ﷺ குடித்த பான வகைகள் / 141
பாடம் 32: அல்லாஹ்வின் தூதர் ﷺ குடிக்கும் விதம் / 143
பாடம் 33: அல்லாஹ்வின் தூதர் ﷺ வாசனை பூசுதல் / 146
பாடம் 34: அல்லாஹ்வின் தூதர் ﷺ உரையாடல் / 148
பாடம் 35: அல்லாஹ்வின் தூதர் ﷺ புன்னகை / 149
பாடம் 36: அல்லாஹ்வின் தூதர் ﷺ நகைச்சுவை / 154

பாடம் 37: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின்
கவிதை ஈடுபாடு / 158

பாடம் 38: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின்
இரவு உரையாடல் / 162

பாடம் 39: அல்லாஹ்வின் தூதர் ﷺ உறங்கும் முறை / 168

பாடம் 40: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின்
வணக்கவழிபாடு / 171

பாடம் 41: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின்
முற்பகல் (லுஹா) தொழுகை / 181

பாடம் 42: அல்லாஹ்வின் தூதர் ﷺ வீட்டில்
தொழும் உபரித் தொழுகை / 184

பாடம் 43: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் நோன்பு / 185

பாடம் 44: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள்
குர்ஆன் (கிராஅத்) ஓதுதல் / 191

பாடம் 45: அல்லாஹ்வின் தூதர் ﷺ கண்ணீர் வடித்தல் / 194

பாடம் 46: அல்லாஹ்வின் தூதர் ﷺ படுக்கை / 198

பாடம் 47: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் பணிவு / 200

பாடம் 48: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின்
நற்குணங்கள் / 204

பாடம் 49: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின்
வெட்க உணர்வு / 211

பாடம் 50: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் ஹிஜாமா
(இரத்தம் குத்தி எடுத்தல்) / 212

பாடம் 51: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் பெயர்கள் / 215

பாடம் 52: அல்லாஹ்வின் தூதர் ﷺ வயது / 216

பாடம் 53: அல்லாஹ்வின் தூதர் ﷺ மரணம் / 218

பாடம் 54: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் சொத்துகள் / 228

பாடம் 55: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களைக் கனவில்
பார்ப்பது / 232

பாடம் 1
அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் உடலமைப்பும் தோற்றமும்

❁

1. அனஸ் ؓ அறிவிக்கிறார்கள்:

كَانَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَيْسَ بِالطَّوِيلِ الْبَائِنِ وَلاَ بِالْقَصِيرِ وَلاَ بِالأَبْيَضِ الأَمْهَقِ وَلاَ بِالآدَمِ وَلاَ بِالْجَعْدِ الْقَطَطِ وَلاَ بِالسَّبْطِ بَعَثَهُ اللَّهُ تَعَالَى عَلَى رَأْسِ أَرْبَعِينَ سَنَةً فَأَقَامَ بِمَكَّةَ عَشْرَ سِنِينَ وَبِالْمَدِينَةِ عَشْرَ سِنِينَ وَتَوَفَّاهُ اللَّهُ تَعَالَى عَلَى رَأْسِ سِتِّينَ سَنَةً وَلَيْسَ فِي رَأْسِهِ وَلِحْيَتِهِ عِشْرُونَ شَعَرَةً بَيْضَاءَ

அல்லாஹ்[4]வின் தூதர்[5] ﷺ அவர்கள் அதிக உயரமில்லாமலும் குள்ளமில்லாமலும் (நடுத்தரமான உயரத்தில்) இருந்தார்கள்.

4 அல்லாஹ் (ﷲ): படைப்புகள் வணங்குவதற்கும் கீழ்ப்படிவதற்கும் தகுதியான இறைவன் என்று பொருள். ஒவ்வொரு மொழியிலும் இறைவனைக் குறிப்பிடச் சொல்லப்படும் பொதுச்சொல் போல அறபுமொழியிலும் இதை அறபுக் கிறித்துவர்களும் யூதர்களும் பயன்படுத்தி வருகிறார்கள். எனினும், உண்மையில் இது வெறுமனே ஓர் அறபுச்சொல் அல்ல. அதையும் தாண்டி இறைவன் தனக்குத்தானே சூட்டிக்கொண்ட மிக அழகிய பெயர். படைத்து பரிபாலிக்கும் ஒரே இறைவனை மட்டுமே இது குறிக்கும்.

5 நபி (نَبِيٌّ), ரஸூல் (رَسُولٌ): நபி, ரஸூல் ஆகிய இரண்டு சொற்களும் இறைத் தூதர் என்ற கருத்தையே தந்தாலும், இஸ்லாமிய ஆதாரங்களின் பார்வையில் வேறுபாட்டை உணர்த்துகின்றன. அல்லாஹ்வின் புறத்திலிருந்து வஹ்யி எனும் விசேஷச் செய்தியைப் பெறுபவர் நபி. உதாரணம்: ஹாரூன். ஆனால், வஹ்யியைப் பெறுவது மட்டுமின்றி, ஒரு சமூகத்திடம் அனுப் பப்பட்டு தனிச் சட்டதிட்டங்கள் (ஷரீஅத்) வழங்கப்படுபவர் ரஸூல். உதாரணம்: மூஸா, ஈசா. நபி என்பவர் தமக்கு முந்திய அல்லது சமகால ரஸூலின் ஷரீஅத்தைப் பின்பற்றுவார். மூஸாவின் ஷரீஅத்தை ஹாரூன் பின்பற்றினார். இஸ்ரவேலர்களுக்கு இவ்வாறு எல்லாக் காலத்திலும் நபிமார்கள் இருந்தார்கள். ஒரு நபி இறந்தவுடன் இன்னொரு நபியை

பாடம் 3
அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் சிகை அலங்காரம்

21. அனஸ் ؓ அறிவிக்கிறார்கள்:

كَانَ شَعَرُ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِلَى نِصْفِ أُذُنَيْهِ

நபி ﷺ அவர்களின் தலைமுடி அவர்களின் காதுப்பகுதி வரைக்கும் இருந்தது. (சுனனுன் நஸாயீ 5234)

22. ஆயிஷா ؓ அறிவிக்கிறார்கள்:

كُنْتُ أَغْتَسِلُ أَنَا وَرَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مِنْ إِنَاءٍ وَاحِدٍ وَكَانَ لَهُ شَعَرٌ فَوْقَ الْجُمَّةِ وَدُونَ الْوَفْرَةِ

நானும் நபி ﷺ அவர்களும் (ஒருசேர) ஒரே பாத்திரத்திலிருந்து (நீரெடுத்துக்) குளித்திருக்கின்றோம். அவர்களது தலைமுடி காது சோணைப்பகுதிக்குக் கீழே பிடரிக்கு மேலே வரை இருந்தது. (சுனனுத் திர்மிதீ 1755)

23. உம்மு ஹானீ ؓ அறிவிக்கிறார்கள்:

قَدِمَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَكَّةَ وَلَهُ أَرْبَعُ غَدَائِرَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் ஒரு தடவை மக்காவுக்கு வந்திருந்தார்கள். அப்போது அவர்களின் தலை முடியில் நான்கு பின்னல்கள் - சடைகள் இருந்தன. (சுனனுத் திர்மிதீ 1781)

24. இப்னு அப்பாஸ் ؓ அறிவிக்கிறார்கள்:

أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، كَانَ يَسْدِلُ شَعَرَهُ، وَكَانَ الْمُشْرِكُونَ يَفْرُقُونَ رُءُوسَهُمْ، فَكَانَ أَهْلُ الكِتَابِ يَسْدِلُونَ رُءُوسَهُمْ، وَكَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

பாடம் 7
அல்லாஹ்வின் தூதர் ﷺ கண்ணுக்கு ஸுர்மா இடுதல்



42. இப்னு அப்பாஸ் ﷺ அறிவிக்கிறார்கள்:

أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: اكْتَحِلُوا بِالإِثْمِدِ فَإِنَّهُ يَجْلُو الْبَصَرَ وَيُنْبِتُ الشَّعْرَ وَزَعَمَ أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ كَانَتْ لَهُ مُكْحُلَةٌ يَكْتَحِلُ مِنْهَا كُلَّ لَيْلَةٍ ثَلاثَةً فِي هَذِهِ وَثَلاثَةً فِي هَذِهِ

இஸ்மித் என்னும் சுர்மாவைக் கண்களில் இட்டுக்கொள்க! அது பார்வையைக் கூர்மையாக்கும்; இமை முடிகளை வளரச் செய்யும் என நபி ﷺ கூறினார்கள். - இது ஸஹீஹ் தரத்திலானது.

நபி ﷺ அவர்களிடம் பிரத்தியேகமாக ஒரு சுர்மா கூடு இருந்தது. அவர்கள் ஒவ்வோர் இரவும் - வேறோர் அறிவிப்பில் - உறங்கச் செல்லும் முன்பு சுர்மாவை வலது கண்ணில் மூன்று முறையும் இடது கண்ணில் மூன்று முறையும் இடுவார்கள். (சுனனுத் திர்மிதீ 1757)

இதன் முற்பகுதி ஆதாரப்பூர்வமானது. பிற்பகுதி மிகவும் பலவீனமானது; இப்னு மாஜாவிலும் உள்ளது.

43. ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ﷺ அறிவிக்கிறார்கள்:

عَلَيْكُمْ بِالْإِثْمِدِ عِنْدَ النَّوْمِ فَإِنَّهُ يَجْلُو الْبَصَرَ, وَيُنْبِتُ الشَّعَرَ

‘உறங்கச் செல்லும்போது அவசியம் சுர்மா இட்டுக்கொள். ஏனெனில், அது பார்வையைக் கூர்மையாக்கும்; இமை முடிகளை வளரச் செய்யும்’ என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (சுனனு இப்னு மாஜா 3496)

பாடம் 24
அல்லாஹ்வின் தூதர் ﷺ உண்ணும் முறை

❁

119. கஅப் இப்னு மாலிக் ؓ அறிவிக்கிறார்கள்:

كَانَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَأْكُلُ بِأَصَابِعِهِ الثَّلاثِ وَيَلْعَقُهُنَّ

அல்லாஹ்வின் தூதர் ﷺ (உணவருந்திய பின்) தங்களின் கை விரல்களை மூன்று முறை சூப்பிக்கொள்வார்கள். (முஸன்னஃப் அபீ ஷீபா 24467, முஸ்னது பஸ்ஸார் 3820) இதில் முஹம்மது இப்னு பஷ்ஷார் என்னும் பலவீனமானவர் இடம் பெறுவதால் இது பலவீனமானது.

அபூ ஈஸா (திர்மிதீ) கூறுகிறார்கள்: முஹம்மது இப்னு பஷ்ஷார் இடம்பெறாத வேறோர் அறிவிப்பில்,

يَلْعَقُ أَصَابِعَهُ الثَّلاثَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ தம் மூன்று விரல்களைச் சூப்புவார்கள் என்றுள்ளது. (முஸ்லிம் 2032) இது ஆதாரப்பூர்வமானது.

120. அனஸ் ؓ அறிவிக்கிறார்கள்:

كَانَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا أَكَلَ طَعَامًا لَعِقَ أَصَابِعَهُ الثَّلاثَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் (உணவருந்திய பின்) தமது மூன்று விரல்களைச் சூப்பிக்கொள்வார்கள். (முஸ்லிம் 2034)

121. கஃப் இப்னு மாலிக் ؓ அறிவிக்கிறார்கள்:

كَانَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَأْكُلُ بِأَصَابِعِهِ الثَّلاثِ وَيَلْعَقُهُنَّ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் மூன்று விரல்களால் உண வருந்துவார்கள். பின்னர், அவ்விரல்களைச் சூப்புவார்கள். (முஸன்னஃப் இப்னி அபீ ஷீபா 24467)

பாடம் 34
அல்லாஹ்வின் தூதர் ﷺ உரையாடல்

❁

191. ஆயிஷா ؓ அறிவிக்கிறார்கள்:

مَا كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَسْرُدُ سَرْدَكُمْ هَذَا، وَلَكِنَّهُ كَانَ يَتَكَلَّمُ بِكَلَامٍ يُبَيِّنُهُ، فَصْلٌ، يَحْفَظُهُ مَنْ جَلَسَ إِلَيْهِ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் இதோ நீங்கள் பேசுவது போல் வேகமாகப் பேசுவதில்லை. மாறாக, இடைவெளி விட்டு தெளிவாகப் பேசுவார்கள். அவர்களுடன் அமர்ந்திருப்பவர் அதனை மனனம் செய்துகொள்ள முடியும். *(திர்மிதீ 3639)*

புகாரீ, முஸ்லிம், திர்மிதீ, அபூதாவூது ஆகிய நூல்களிலும் கிட்டத்தட்ட இதே கருத்து அமைந்துள்ள ஹதீஸ்கள் உள்ளன.

192. அனஸ் ؓ அறிவிக்கிறார்கள்:

كَانَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يُعِيدُ الْكَلِمَةَ ثَلاثًا لِتُعْقَلَ عَنْهُ

அல்லாஹ்வின் தூதர் ﷺ பெரும்பாலும் ஒரு வார்த்தையை, அது பிறரால் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதற்காக மூன்று முறை திருப்பிக் கூறுவார்கள். *(சுனனுத் திர்மிதீ 3640)*

பாடம் 36
அல்லாஹ்வின் தூதர் ﷺ
நகைச்சுவை

❁

200. அனஸ் ؓ அறிவிக்கிறார்கள்:

إِنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ لَهُ: يَا ذَا الأُذُنَيْنِ قَالَ مَحْمُودٌ: قَالَ أَبُو أُسَامَةَ: يَعْنِي يُمَازِحُهُ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் என்னை 'நீளமான காது களையுடையவரே' என்று அழைப்பார்கள். அதாவது, வேடிக்கையாக அவ்வாறு அழைப்பார்கள் என அபூ உஸாமா கூறுகிறார். (சுனனுத் திர்மிதீ 3828)

201. அனஸ் ؓ அறிவிக்கிறார்கள்:

إِنْ كَانَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لَيُخَالِطُنَا حَتَّى يَقُولَ لأَخٍ لِي صَغِيرٍ: يَا أَبَا عُمَيْرٍ مَا فَعَلَ النُّغَيْرُ ؟

நபி ﷺ எங்களுடன் கலந்து பழகக்கூடியவர்களாக இருந்தார்கள். எந்த அளவுக்கெனில் எனது ஒன்றுவிட்ட சகோதரனிடம், அபூ உமைரே! நுகைருக்கு (சிறு குருவிக்கு) என்ன ஆனது?' என அன்னார் வினவினார்கள். (புகாரீ 6129, சுனனுத் திர்மிதீ 333)

இமாம் திர்மிதீ ؒ இதுபற்றிக் கூறுவதாவது: இந்த ஹதீஸிலிருந்து நபி ﷺ அவர்கள் வேடிக்கையாகப் பேசியிருக்கிறார்கள் என்பதுடன், அபூ உமைரே! - உமைரின் தந்தையே! - என்று சிறுவனுக்குக்கூட குன்யத் என்னும் (சிறப்புப்) பெயரைச் சூட்டியிருக்கிறார்கள் என்பதும் தெரியவருகின்றன. விளையாடுவதற்காகச் சிறுவனிடம் பறவையை வழங்குவதில் தவறில்லை என்பதும் தெரிகிறது.

பாடம் 45
அல்லாஹ்வின் தூதர் ﷺ கண்ணீர் வடித்தல்

❁

276. அப்துல்லாஹ் இப்னு ஷிக்கீர் ؒ அறிவிக்கிறார்கள்:

أَتَيْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَهُوَ يُصَلِّي وَلِجَوْفِهِ أَزِيزٌ كَأَزِيزِ الْمِرْجَلِ مِنَ الْبُكَاءِ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தொழுதுகொண்டிருக்கும்போது நான் அவர்களிடம் வந்தேன். அப்போது அழுகையின் காரணத்தால் அவர்களின் நெஞ்சிலிருந்து கொதிக்கும் பாத்திரத்திலிருந்து வருவது போன்ற இரைச்சல் வந்துகொண்டிருந்தது. (சுனனு அபீதாவூது 904, முஸ்னது அஹ்மது 16355)

277. இப்னு மஸ்ஊது ؓ அறிவிக்கிறார்கள்:

قَالَ لِي رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : اقْرَأْ عَلَيَّ فَقُلْتُ: يَا رَسُولَ اللهِ أَقْرَأُ عَلَيْكَ وَعَلَيْكَ أُنْزِلَ قَالَ: إِنِّي أُحِبُّ أَنْ أَسْمَعَهُ مِنْ غَيْرِي فَقَرَأْتُ سُورَةَ النِّسَاءِ حَتَّى بَلَغْتُ وَجِئْنَا بِكَ عَلَى هَؤُلاءِ شَهِيدًا قَالَ: فَرَأَيْتُ عَيْنَيْ رَسُولِ اللهِ تَهْمِلانِ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் குர்ஆனைத் தமக்கு ஓதிக் காட்டுமாறு என்னிடம் கூறியதும், 'அல்லாஹ்வின் தூதரே! குர்ஆன் உங்கள்மீது அருளப்பட்டிருக்க நான் உங்களிடம் ஓதிக்காட்டவா?' எனக் கேட்டேன். அதற்கவர்கள், 'நான் பிறர் ஓதுவதைக் கேட்க விரும்புகின்றேன்' என்றதும் நான் அன்னிஸா என்னும் (நான்காம்) அத்தியாயத்தை ஓதத் தொடங்கினேன். நான் 'இம்மக்களுக்குச் சாட்சியாக (மறுமையில்) உம்மைக்கொண்டு வருவோம்' என்ற வசனத்தை அடைந்தபோது நபி ﷺ அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வடிவதை நான் கண்டேன். (புகாரீ 4583, முஸ்லிம் 800)

பாடம் 48
அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் நற்குணங்கள்

294. காரிஜா இப்னு ஸைத் இப்னு சாபித் ﷺ அறிவிக்கிறார்கள்:

دَخَلَ نَفَرٌ عَلَى زَيْدِ بْنِ ثَابِتٍ فَقَالُوا لَهُ: حَدِّثْنَا أَحَادِيثَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: مَاذَا أُحَدِّثُكُمْ ؟ كُنْتُ جَارَهُ فَكَانَ إِذَا نَزَلَ عَلَيْهِ الْوَحْيُ بَعَثَ إِلَيَّ فَكَتَبْتُهُ لَهُ فَكُنَّا إِذَا ذَكَرْنَا الدُّنْيَا ذَكَرَهَا مَعَنَا وَإِذَا ذَكَرْنَا الآخِرَةَ ذَكَرَهَا مَعَنَا وَإِذَا ذَكَرْنَا الطَّعَامَ ذَكَرَهُ مَعَنَا فَكُلُّ هَذَا أُحَدِّثُكُمْ عَنِ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

சிலர் ஸைத் இப்னு சாபித்திடம் வந்து அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் சம்பந்தப்பட்ட விசயங்களை எங்களுக்கு அறிவியுங்கள் என்றார்கள். உடனே அவர்கள், 'அவைகளில் நான் உங்களுக்கு எதை அறிவிப்பது? நான் அன்னாரின் பக்கத்து வீட்டுக்காரன். அவர்களுக்கு வஹ்யி[9] - இறைச்செய்தி வந்துவிட்டால் என்னை அழைப்பார்கள். நான் அதை எழுதுவேன். நாங்கள் உலக சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்தால் அவர்களும் எங்களுடன் அதுபற்றிப் பேசுவார்கள். நாங்கள்

9 மொழி வழக்கில் வஹ்யி (اَلْوَحْي) என்றால் இரகசியமான தகவல் பரிமாற்றம், வெளிப்பாடு எனப் பொருள்படும். இஸ்லாமிய வழக்கில் இதன் பொருள், அல்லாஹ் தன்னுடைய தூதர்களில் ஒருவருக்கு தன் வார்த்தைகளை அறிவித்து வழிகாட்டும் முறை என்பதாகும். இமாம் இப்னுல் கய்யிம் ﷺ இதனை ஏழு வகைப்படுத்துகிறார்கள். 1. உண்மையான கனவு, 2. வானவர், நபி ﷺ அவர்களின் கண்முன் தோன்றாமல் உள்ளத்தில் செய்தியைப் போடுவது, 3. வானவர், ஓர் ஆண் உருவத்தில் தோன்றி நபியவர்களிடம் பேசுவது, 4. வானவர் மணியோசையைப் போன்று வருவது, 5. வானவர் தம் சுய உருவத்தில் தோன்றி செய்திகளை அறிவிப்பது, 6. நபியவர்களை அல்லாஹ் ஏழு வானங்களுக்கு மேல் அழைத்துப் பேசுவது, 7. வானவரின்றி நேரடியாக அல்லாஹ் பேசுவது. (ஸாதுல் மஆது, ப.78)

பாடம் 55
அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களைக் கனவில் பார்ப்பது

❁

343. இப்னு மஸ்ஊது ﷺ அறிவிக்கிறார்கள்:

مَنْ رَآنِي فِي الْمَنَامِ فَقَدْ رَآنِي فَإِنَّ الشَّيْطَانَ لا يَتَمَثَّلُ بِي

என்னை யார் கனவில் கண்டாரோ அவர் என்னையே கண்டார். ஏனெனில், ஷைத்தான் எனது உருவில் வர முடியாது என அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள். (முஸ்லிம் 2266)

344. அபூ ஹுறைறா ﷺ அறிவிக்கிறார்கள்:

مَنْ رَآنِي فِي الْمَنَامِ فَقَدْ رَآنِي فَإِنَّ الشَّيْطَانَ لا يَتَصَوَّرُ أَوْ قَالَ: لا يَتَشَبَّهُ بِي

என்னை யார் கனவில் கண்டாரோ அவர் என்னையே கண்டார். ஏனெனில், ஷைத்தான் எனது உருவத்தில் அல்லது என்னைப் போன்ற வடிவத்தில் வர இயலாது என அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள். (புகாரீ 110, முஸ்லிம் 2266)

345. அபூ மாலிக் அல்அஷ்ஜயீ ﷺ அவர்கள் தன்னுடைய தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்:

مَنْ رَآنِي فِي الْمَنَامِ فَقَدْ رَآنِي

என்னை யார் கனவில் கண்டாரோ அவர் என்னையே கண்டார் என நபி ﷺ கூறியதாக எனது தந்தை(யாகிய தாரிக் ﷺ) குறிப்பிட்டுள்ளார். (முஸ்னது அஹ்மது 15880)

346. ஆஸிம் இப்னு குலைப் அவர்கள் தன்னுடைய தந்தை கூறியதாக அறிவிக்கிறார்கள்:

عَنْ عَاصِمِ بْنِ كُلَيْبٍ قَالَ: حَدَّثَنِي أَبِي أَنَّهُ سَمِعَ أَبَا هُرَيْرَةَ يَقُولُ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: مَنْ رَآنِي فِي الْمَنَامِ فَقَدْ رَآنِي فَإِنَّ الشَّيْطَانَ لا يَتَمَثَّلُنِي قَالَ أَبِي: